Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTU
CC NO. **84/2017**
**Depostitions of PW- 2 Witness for**

| | |
|---|---|
| Name | மகாலிங்கம் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22th day of November 2023.

Signature of Witness.

22.11.2023

3 ம் எதிரி ஆஜர் இல்லை குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.

கேள்வி – உங்கள் பெயர் என்ன ?

பதில் – மகாலிங்கம்.

கேள்வி – அப்பாவின் பெயர் என்ன ?

பதில் – காளியப்பன்

கேள்வி – அம்மாவின் பெயர் என்ன ?

பதில் – சங்கரி

கேள்வி – இது என்ன இடம் என்று தெரியுமா ?

பதில் – கோர்ட்

கேள்வி – நீங்கள் என்ன படிக்கிறீர்கள் ?

பதில் – 9 ம் வகுப்பு படிக்கிறேன்.

கேள்வி – பொய் சொல்லாமா ?

பதில் – சொல்லக்கூடாது.

சாட்சி கேட்கின்ற கேள்விகளை புரிந்து கொண்டு மேற்கண்டவாறு பதில்அளித்துள்ளதால் அவர் சாட்சியம் அளிக்க தகுதியானவர் என்பதால் அவரது சாட்சியம் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை–</u>

எனக்கு செண்பகா தோப்பு ஆகும். அ.சா.1 பாண்டியன் எனது மாமா ஆவார். மணிகண்டன் எனது அண்ணன் ஆகும். சக்கரத்தார் கோவில் அருகே நானும், மணிகண்டனும் விளையாடிக்கொண்டிருந்தோம். தோப்புக்கு மரத்தடியில் ஒரு டப்பா இருந்தது. அதை டேப் சுத்தி வைத்திருந்தார்கள். அதை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு போனோம். வீட்டிற்கு போய் டேப்பை உரித்துவிட்டு கல்லை வைத்து தட்டினோம். அப்போது அது வெடித்துவிட்டது. அதில் எனது இடது கையில் அடிபட்டது. சாட்சி தனது இடது கையை காட்டி சொல்கிறார் . சாட்சிக்கு இடது கையில் பெருவிரல் இல்லை. மேற்படி வெடி வெடித்ததில் தான் தனக்கு பெருவிரல் போய்விட்டது. சாட்சியின் நடுவிரல் வீக்கமாக உள்ளது. தொடையிலும் காயம் ஏற்பட்டது. மணிகண்டனுக்கு காலில் இரண்டு காயம் ஏற்பட்டது. பின்னர் எங்களை ஆஸ்பத்திரிக்கு பாரஸ்ட்காரங்க கூட்டிட்டு போனார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். சக்கரத்தாழ்வார் கோவில் மலை ஓரத்தில் இருக்கக்கூடிய தோப்பில் தான் அந்த டப்பா இருந்தது.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.